**கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,**
**விருதுநகர் மாவட்டம் (இருப்பு) திருவில்லிபுத்தூர்**

**OS.No: 134/2010** நாள் 26.02.2024

பிவாசா.1, திரு.சஞ்சீவிராஜ்

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் வாதி தரப்பில் குறுக்கு விசாரணை–**

நிரூபண வாக்குமூலம் தயார் செய்ய விபரம் சொன்னது யார் என்றால் நான் தான் சொன்னேன். எதிர்வழக்குரையில் உள்ள விபரங்களை நான் தான் சொன்னேன். 06.01.1989, 23.12.1999, 06.11.1989 என மூன்று உயில்களை குறித்து எதிர்வழக்குரையில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். ஆனால் 06.01.1989 என்று தவறுதலாக தட்டச்சு செய்யப்பட்டுள்ளது 06.11.1989 தான் சரியான தேதியாகும். நான் என் தகப்பனாருக்கு இரண்டாம்தாரத்து மகன் என்றால் சரிதான். எனது தாத்தாவுடன் பிறந்த தம்பிகளின் பெயர் என்னவென்றால் சஞ்சீவி நாயக்கர், ரெங்கசாமி நாயக்கர். எனது சித்தப்பா தர்மராஜ் இறக்கும் போது எனக்கு ஏழு வயது. எனது மற்றொரு சித்தப்பா செல்வராஜ் மனநலம் சரியில்லாமல் மூக்கு இல்லாமல் இருந்தார் என்றால் சரியல்ல அவர் நல்ல மனநிலையில் தான் இருந்தார் அவருக்கு சிறு வயதில் மூக்கில் கைவில்லில் அடிக்கப்பட்ட கல்லால் காயம்பட்டு மூக்கு சப்பட்டையாகிவிட்டது. செல்வராஜ் வாலிப வயதுவரையிலும் டிரவுசர் சட்டை போட்டுக்கொண்டு மரத்தடியில் அமர்ந்திருந்தார் என்றாலும் அவர் பள்ளிக்கு செல்லவில்லை என்றாலும் சரியல்ல. அவர் பள்ளி சென்றார். அவர் எந்த பள்ளியில் படித்தார் என்றால் நாச்சியார்பட்டியில் இருந்த பள்ளியில் படித்தார். வாய்மொழி பாகம் எந்த தேதி, மாதம், வருடம் மற்றும் யார் முன்னிலையில் பிரிக்கப்பட்டது என்று எதிர்வழக்குரையில் சொல்லவில்லை என்றால் 1986 ல் பாகம் பிரிக்கப்பட்டது. எங்கள் சார்பாக பாக பிரிவினையில் யார் கையொப்பம் செய்தார்கள் என்றால் கிருஷ்ணவேணி கையொப்பம் செய்தார். அந்த பாக பத்திரத்தில் யார் எந்த பாகம் அடையவேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருந்ததா என்றால் குறிப்பிடப்பட்டிருந்தது. பாக பிரிவினை பத்திரம் எவ்வளவு நகல்கள் எழுதப்பட்டன என்றால் நான்கு அல்லது ஐந்து நகல்கள் எழுதப்பட்டது. என்னிடம் காட்டப்படுவது 02.07.1986 ல் எழுதப்பட்ட பதிவு செய்யப்படாத பாக பத்திரத்தின் ஒரு பிரதி (Counter part) தான் என்னிடம் காட்டப்படுவது. அந்த பாக பத்திரத்தின் பிரதி **வா.சாஆ.7**. மேற்படி வாசாஆ.7 ல் கிருஷ்ணவேணி கையொப்பம் செய்துள்ளாரா என்றால் இந்த பிரதியில் கையொப்பம் செய்யவில்லை. எங்களிடமும் வாசாஆ.7 பத்திரத்தின் மற்றொரு பிரதி உள்ளது. அதில் கிருஷ்ணவேணியின் கையொப்பம் உள்ளது. நாங்கள் கையொப்பம் செய்த பத்திரம் வாதியிடமும் அவர்கள் தரப்பினர் கையொப்பம் செய்த பத்திரம் எங்களிடமும் உள்ளது. வாசாஆ.7 ல் பாகம் பிரித்து கொடுக்கப்பட்டதாக குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. வாதி எங்களுக்கு எழுதிக்கொடுத்ததாக சொல்லப்படும் பத்திரம் என் வசம் உள்ளதா என்றால் உள்ளது. எனது சித்தப்பா செல்வராஜை மைனர் என்று வாசாஆ.7 பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். செல்ராஜ் அந்த காலகட்டத்தில் மைனராக இருந்தார் என்றால் இருக்கலாம். அப்போது அவருக்கு 13 வயது இருக்கலாம் என்றால் எனக்கு தெரியாது. பொதுவாக

(ஓம்/) திருமதி.கஜரா ஆர்.ஜிஜி)
கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம்,
திருவில்லிபுத்தூர்.

எங்கள் சமுதாயத்தில் கணவன் இறந்த பிறகு மூன்று மாதங்கள் கழித்து தான் வெளியே வரலாம் என்றால் சரியல்ல. கணவர் இறந்த பிறகு காரியங்கள் முடிந்த பிறகு தான் இறந்தவரின் மனைவி வீட்டை விட்டு வெளியே வருவார் என்றால் சரிதான். 25.06.1986 ல் தர்மராஜ் இறந்துவிட்டார் என்றால் சரிதான். வாசாஆ.7 தர்மராஜ் இறந்து ஐந்து நாட்கள் கழித்து 02.07.1986 அன்று எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். செல்ராஜ் அவரை பராமரிப்பதற்கும், உணவளிக்கவும் ஆள் இல்லாமல் தற்கொலை செய்து இறந்துவிட்டார் என்றால் சரியல்ல எனது அத்தை பராமரித்து வந்தார். செல்வராஜ் மனவளர்ச்சி குன்றி இருந்ததாலும் அவரது மூக்கில் இருந்து சீழ் வழிந்து கொண்டிருந்ததாலும் அவரை யாரும் பராமரிக்காததால் தற்கொலை செய்து இறந்துவிட்டார் என்றால் சரியல்ல. நான் அப்போது சிறு வயதாக இருந்ததால் எனக்கு எந்த விபரமும் தெரியாது என்றாலும் தற்போது வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ள சொத்துக்களை தவிர வேறு பூர்வீக சொத்து உள்ளதா என்றால் இருக்கலாம். இந்த சொத்துக்களின் விபரத்தை எதிர்வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சொத்துக்களின் பட்டா மாறி மாறி இருந்தது. எனது அத்தை சரஸ்வதியம்மாள் தனது சகோதரர் எழுதிய உயில் இருப்பதாக தெரிவித்து நீதிமன்றத்தில் உரிய மனு தாக்கல் செய்யவில்லை என்றால் எங்களிடம் சொன்னார். என் தகப்பனார் போலியாக உருவாக்கிய உயில் தான் பிவாசாஆ.15 என்றால் சரியல்ல. எதிர்வழக்குரையில் எங்களுடைய பங்கையும் சேர்த்து உயில் எழுதப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளேன் என்றால் சரியல்ல. பிவாசாஆ.15 உயிலில் பிரிக்கப்படாத மூன்றில் ஒரு பாகம் என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. கிணறு, படப்படி, காலிமனை ஆகியவற்றில் மூன்றில் ஒரு பாகம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது மற்ற சொத்துக்கள் தனித்தனி காடு. பட்டாக்களை எதன் அடிப்படையில் பிவாசாஆ.1, பிவாசாஆ.2, பிவாசாஆ.10 முதல் பிவாசாஆ.21, பிவாசாஆ.23, பிவாசாஆ.24, பிவாசாஆ.26 ஆகிய பட்டாக்களை எதன் அடிப்படையில் மாற்றினேன் என்றால் என் பெயரில் உள்ள பட்டாக்களை பத்திரத்தின் அடிப்படையில் மாற்றினேன் என் தந்தை பெரியல் ஏற்கனவே பட்டா மாறிவிட்டது. எனது அப்பா பெயரிலும் என் பெயரிலும் உள்ள பட்டாக்களை எந்தபத்திரத்தின் அடிப்படையில் மாற்றினேன் என்று பத்திரம் தாக்கல் செய்யவில்லை என்றால் என் அப்பாவிற்கு வாரிசு அடிப்படையில் பட்டா மாற்றப்பட்டது. எனது பெயரில் உள்ள பத்திரம் தாக்கல் செய்துள்ளேன். வட்டாட்சியரை சாட்சியாக விசாரித்தால் பட்டா எவ்வாறு மாற்றப்பட்டது என்ற விபரம் தெரியவரும் என்றால் சரிதான். பிவாசாஆ.12 ல் குறிப்பிடப்பட்டுள்ளது எனது தாத்தாவிற்கும் எனது சின்ன தாத்தாவிற்கும் பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்றால் சரிதான். எனது சின்ன தாத்தா சஞ்சீவி நாயக்கரின் வாரிசுகளில் ஒரு நபர் தான் பிவாசாஆ.12 ல் கையொப்பம் செய்துள்ளார் என்றாலும் மற்றொரு வாரிசு கையொப்பம் செய்யவில்லை என்றாலும் சரிதான். பிவாசாஆ.12 ல் எனது தகப்பனார் கிரையமாக தான் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரிதான். பிவாசாஆ.12 ல் எனது சித்தப்பா தர்மராஜிற்கு பாகம் உள்ளது என்றால் சரியல்ல. பட்டா எண்.583 ல் சர்வே எண்.322/13 ல் உள்ள விஸ்தீரணம் 2.00 ஏர்ஸ் சொத்து எது என்றால் ரெங்கசாமி நாயக்கர், சஞ்சீவி நாயக்கர், பெருமாள் சாமி

(ஒம்/) திருமதி.கஜரா ஆர்.ஜிஜி)
கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம்,
திருவில்லிபுத்தூர்.

நாயக்கர் ஆகிய மூவருக்கும் பாகம் உள்ள சொத்து. மேற்படி சொத்திற்கு என்னுடைய பெயரில் மட்டும் எவ்வாறு பட்டா வந்தது என்றால் செல்வராஜ் எழுதிய உயில் மூலம் வந்தது. நான் மோசடியாக வருவாய் ஆவணங்களை எனது பெயரில் மாற்றியுள்ளேன் என்றால் சரியல்ல. பட்டா எண்.1899 ல் சர்வே எண்.1192/1 ல் உள்ள விஸ்தீரணம் 0.19.50 ஏர்ஸ், சர்வே எண்.1193/4 ல் உள்ள விஸ்தீரணம் 0.21.50 ஏர்ஸ், சர்வே எண்.505/1B, ல் உள்ள விஸ்தீரணம் 0.36.00 ஏர்ஸ் சொத்துகள் எது என்றால் எனது அப்பா பெயரில் உள்ள சொத்துக்கள் வழக்கில் சொல்லப்பட்டுள்ளன. பட்டா எண் 1899 ஐ மாற்றுவதற்கு என்ன ஆவணங்கள் கொடுக்கப்பட்டன என்பதை வட்டாட்சியரை விசாரித்தால் தெரியவரும் என்றால் சரிதான். பட்டா எண்.2447 ல் சர்வே எண்.1193/1 ல் உள்ள விஸ்தீரணம் 0.3.0 ஏர்ஸ் சொத்து எது என்றால் கிணறு. பட்டா எண்.2593 ல் சர்வே எண்.1195/2 C ல் உள்ள விஸ்தீரணம் 0.2.00 ஏர்ஸ் சொத்து எது என்றால் கமலைக்குழி. பட்டா எண்.1276 ல் சர்வே எண்.1192/4 ல் உள்ள விஸ்தீரணம் 0.16.0 ஏர்ஸ், சர்வே எண்.1194/1 ல் உள்ள விஸ்தீரணம் 0.28.50 ஏர்ஸ், சர்வே எண்.1195/2A ல் உள்ள விஸ்தீரணம் 0.2.50 ஏர்ஸ், சர்வே எண்.1195/2E, ல் உள்ள விஸ்தீரணம் 0.13.00 ஏர்ஸ் சர்வே எண்.7/1 ல் உள்ள விஸ்தீரணம் 0.48.00 ஏர்ஸ் சொத்துகள் எது என்றால்சொத்துகள் எது என்றால் சர்வே எண்.7/1 எங்கள் நிலம் கிடையாது. சர்வே எண்.1194/1 ல் உள்ள சொத்து வெங்கிடம்மாளுக்கு எழுதிக்கொடுக்கப்பட்ட சொத்து. வெங்கிடம்மாளுக்கு பத்திரம் எதுவும் எழுதிக்கொடுக்கவில்லை என்றாலும் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. பட்டா எண்.1276 ல் தற்போதும் என் தாத்தா பெருமாள்சாமி பெயரில் தான் உள்ளது என்றால் சரிதான். நான் சொன்னது போல வெங்கிடம்மாளுக்கு பத்திரம் எழுதிக்கொடுத்திருந்தால் அவரது பெயருக்கு பட்டா மாறியிருக்கும் என்றாலும் வெங்கிடம்மாளுக்கு பத்திரம் எழுதியதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

(வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது. )

சாட்சியின் கையொப்பம்

**Name of the Interpreter : Not necessary**

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1989 (Central Act 44 of 1989 on the 26th day of February 2024.

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் செய்யப்பட்டது.**

**(ஓம்/) திருமதி.கஜரா ஆர்.ஜிஜி)**
**கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,**
**கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம்,**
**திருவில்லிபுத்தூர்.**